ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2026.10.15 |

# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 செத்தெம்பர்

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2026 செத்தெம்பரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களினை எடுத்துகாட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு) 2026 செத்தெம்பரில் 53.0 சுட்டெண் பெறுமதியொன்றினைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றி காணப்படுகின்றது.** தயாரிப்பு நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் அதையொத்த வேகத்தில் தொடர்ந்தும் விரிவடையுமென இது எடுத்துக்காட்டுகின்றது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றின் விரிவாக்கத்திற்கு உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் தயாரிப்பு துறைகள் ஆகிய இரண்டிலும் சாதகமான அபிவிருத்திகள் பாரியளவில் காரணமாக அமைந்தன. அதேவேளை, தொழில்நிலை, செத்தெம்பரில் மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் விரிவடைந்தது. எனினும், கொள்வனவுகளின் இருப்பு நடுநிலையான எல்லையை நோக்கி மிதமடைந்து, மாதகாலப்பகுதியில் இருப்பு மட்டங்களில் பரந்தளவில் மாற்றமின்றி இருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், மாதகாலப்பகுதியில் நிரம்பலர் விநியோக நேரம் நீட்சியடைந்து காணப்பட்டது.

· கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு

| மாறி | 2026 ஓகத் | 2026 செத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **53.0** | 53.0 | = | **அதிகரிக்கின்றது, அதே வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 50.0 | 51.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 48.4 | 51.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 54.8 | 52.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 54.8 | 50.0 | - | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 63.0 | 63.0 | = | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் இறுதிப் பருவகாலக் கேள்வியின் சாதகமான எண்ணப்பாங்கினால் பாரியளவில் தூண்டப்பட்டு, அடுத்த மூன்று மாதங்களாக தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான தோற்றப்பாடானது சாதகமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 செத்தெம்பர்**
**53.0**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகாரஎல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 ஒத்தோபர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 செத்தெம்பரில் 60.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான வீதமொன்றில் விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டியது.**

வியாபார நடவடிக்கை 2026 செத்தெம்பரில் அதிகரித்து, கல்வி மற்றும் தொழில்சார் பணிகளிலிருந்தான குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களுடன் நிதியியல் பணிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு, பல்வேறு துணைத் துறைகளிடையே முன்னேற்றங்களைப் பிரதிபலித்தது.

காப்புறுதி, கல்வி, தொழில்சார் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகள் போன்றவற்றிலிருந்தான சாதகமானப் பங்களிப்புக்களுடன் நிதியியல் பணிகளின் விரிவாக்கத்தினால் முதன்மையாக தூண்டப்பட்டு, புதிய வியாபாரங்கள் 2026 செத்தெம்பரில் அதிகரித்தன. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேனும் வீழ்ச்சியடைந்தன.

பல்வேறு துறைகளிடையே நிறுவனங்கள் தொழிற்பாட்டு தேவைகளை நிறைவேற்றுவதற்கும் வியாபார விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் ஆட்சேர்ப்பினை அதிகரித்தமையினால் தொழில்நிலை 2026 செத்தெம்பரில் அதிகரித்தது.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | 2026 ஒகத் | 2026 செத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **65.6** | **60.5** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 60.0 | 60.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 53.3 | 54.0 | + | அதிகரிக்கின்றது, உயர்ான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.3 | 49.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 71.7 | 76.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மற்றும் அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் வரவிருக்கும் பண்டிகை பருவகாலம் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, அடுத்த மூன்று மாதங்களில் வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டன. இருப்பினும், பரந்தளவிலான உலகளாவிய பொருளாதார நிச்சயமற்றதன்மைகள் தோற்றப்பாட்டிற்கு இடர்நேர்வுகளினைத் தொடர்ந்தும் தோற்றுவித்தன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 செத்தெம்பர்**
**60.5**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2026 ஒத்தோபர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.